RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s1974

OPEN ACCESS

# அப்துல் ரகுமான் கவிதைகளில் மனித உரிமைகள்

**க. மகேந்திரன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, திரு.வி.க. அரசு கலைக் கல்லூரி, திருவாரூர்-610003, தமிழ்நாடு, இந்தியா

# Human Rights in Abdul Rahman Poems

**K. Mahendran** [a, *]

[a] Department of Tamil, Thiru. Vi. Ka. Government Arts college, Thiruvarur-610003, Tamil Nadu, India

* Corresponding Author: mahendrankaliyaraj@gmail.com

Received: 12-08-2022
Revised: 07-10-2022
Accepted: 27-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Every human being has full right to live and it is up to them to live freely without restriction. Like humanistic thinking, human rights are also important. The right to obtain and enjoy basic human needs is essential. Right and duty are closely related. Respecting the rights of others is one of the fundamental duty. We can express our sense of duty by fulfilling the social responsibilities. Ideas about developing human rights are flourishing over 50 years. There are many extensive discussions and debates going on to develop humanity all around the world. Literature also participates in such debates. Poetry is one of the literary forms that records the thoughts on human rights, that both men and women are equal in human society. History shows that women are considered as inferior in many ways. On the basis of sex, organisms are divided into male and female. But women have a problem that no other species has. This means that the male is subordinated to the female in all positions that women were enslaved by customs, superstitions and religious rituals. They were forced to live in conditions where rights were denied. Many people have raised their voices against these differences at various levels. This article finds the human rights concepts such as social rights, individual rights, political rights, economic rights recorded in the poems of Abdul Rahman who deals with modern poetry.

**Keywords:** Human Rights, Social Rights, Individual Rights, Child, Political Rights, Women's Rights

## முன்னுரை

புதுக்கவிதைகளில் மக்களைப் பற்றிய சிந்தனைகள் மிளிர்ந்து இருப்பதைக் காண முடிகின்றன. இசங்களின் தாக்கமும், சமுதாய அக்கறையும் கவிதைகளில் நிரம்ப கலந்து இருக்கின்றன. பாரதியின் காலந்தொட்டு இன்றுவரை கவிதைகள் சமுதாயப் புரட்சிக்கு மக்களை அழைத்துச் செல்லக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளன. சமூக மதிப்புக் கொண்ட கவிஞர்களால் மனிதநேயச் சிந்தனையை வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது. மக்களுக்குச் சமுதாயத்தில் சம மதிப்பும், உரிமைகளும் இருக்கின்றன. இத்தகைய சிந்தனையை அப்துல் ரகுமான் கவிதைகளில் காணமுடிகிறது. மனிதகுல விடுதலை, உரிமை, ஆகியவற்றை அப்துல் ரகுமான் கவிதைகளில் பதிவுச் செய்யப்பட்டுள்ளன. மனிதனுக்கு அடிப்படைத் தேவைகளை அமைத்துத் தருவதற்கு மனித உரிமைத் துணை நிற்கிறது என்பதை இவ்வாய்வு எடுத்தியம்புகிறது.

மனித சமுதாயத்தில் சமூகக்கட்டமைப்புகளால் மனிதனிடையே மதம், சாதி இவற்றில் கீழாக ஒடுக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு வந்திருக்கின்றன. பிற்காலத்தில்

புரட்சிக்கர சிந்தனையாளர்களால் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு மானிட விடுதலை பெற்றன. மனித சமுதாயம் வழங்கியுள்ள உரிமைகள், மாண்புகள், அறங்கள் காக்கப்பட வேண்டிய முயற்சிகள் நம் கடமையாகிறது.

## மனித உரிமை - விளக்கம்

மனித உரிமைகள் மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தையும், மதிப்பையும் உயர்த்துகின்றன. “சமுதாய மனிதர்கள் ஓர் அரசின் கீழ் கட்டுப்பட்டு வாழ்கிறார்கள். இவர்கள் ஒருவருக்கொருவர் பழகுவதற்கும் ஒருவர் பெறுவதையே மற்றவர் பெறுவதற்கான உரிமையைப் பெறுகிறார்கள். இதற்கு மனித உரிமை என்று பெயர்” (Jagadesan, 2008).

ஒவ்வொரு தனிமனிதனும் எவ்வித இடையூறும் இன்றி சுதந்திரமாக வாழ உரிமைப் பெற்றவன். ஒருவன் தன்னுடைய வாழ்வியல் முறைப்படி உணர்தல், சுவைத்தல், சிந்தித்தல், தன் விருப்பப்படி கருத்துக் கொள்ளளுதல் என்று மற்றவர்களுக்குப் பாதகம் இல்லாமல், தன்னுடைய வலுக்குத் தக்கப்படி தந்து வாழ்க்கையை நடத்திக் கொள்ளுதல் ஆகிய இவைகளே இயற்கையான உரிமைகளாகும்.

“உரிமை என்பது சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு அரசால் செயல்படுத்தப்படுவதாகும்” என்று போசாங்கே எனும் அறிஞர் குறிப்பிடுகிறார் (Vijayakumar, 2022). மனித உரிமைகள் என்பன வாழ்வதற்கான உரிமை, எவ்விதமான பாகுபாடு இல்லாமல் சமமாக நடத்தப்படுவதற்கான உரிமை, மத உரிமை, வெளிப்படையாக பேசுவதற்கும், பொது சமுதாய நிகழ்வுகளிலும் அரசியலிலும் பங்குப் பெறுவதற்கான உரிமை, தூய்மையான சுற்றுச்சூழல் கல்வி, அவரவர் வாழ்க்கையையும், வாழ்கை முறையையும், கலாச்சாரத்தையும் பாதுக்காப்பதற்கான உரிமைகளையும் உள்ளடக்கியதாகும்.

இனம், மதம், மொழி, சமூக பொருளாதார தகுதி அல்லது வயது, பிறப்பு ஆகியவற்றால் பாகுபாடு காட்டக்கூடாது. தனிப்பட்ட ஒருவருக்கு மட்டும் அல்லாமல் சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் இவ்வுரிமை பொதுவானதாகும். மனித சுதந்திரம் மற்றும் மனிதப் பாதுகாப்பை அடிப்படையாக வைத்து உரிமைகள் அமைகின்றன. உலகில் உள்ள அனைத்து மக்களும், ஆண் - பெண் பேதம், இனம், மொழி, மதம், வயது, குடியுரிமை ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு பாகுபாடு இல்லாமல் இத்தகைய உரிமைகளைப் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

உரிமைகள் மனிதனின் பிறப்புரிமைகளாகும். மனிதனின் பிறப்போடு இவ்வுரிமைகளும் இணைந்தே பிறக்கின்றன. மனிதனோடு பிறந்த உரிமைகளை யாரும் கொடுக்கவும் முடியாது, பறித்து விடவும் முடியாது.

## அப்துல் ரகுமான் கவிதையும் உரிமையும்

தமிழ்க்கவிதைக்கும் சமுதாயத்திற்கும் எப்போதுமே நெருங்கிய உறவு நிலவி வந்திருக்கிறது. கவிஞர்கள் சமுதாயத்தைப் பற்றி சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இவர்களின் பெரும்பான்மை கவிதைகள் முற்போக்குப் பாதையில் செல்கிறது.

“முற்போக்குவாதியினிடத்து அறிவு பூர்வமான ஒரு சமூக அற்பணி நிலை (social dedication) யும் சமூகத்தில் பால் வரிப்பு கடப்பாடும் (social commitment) காணப்படுகிறது” என்பது தெளிவாகிறது (Kailasapathi, 1988).

படைப்புக்குத் தேவையான கருத்துக்கள் சமுதாய நிகழ்வுகளில் இருந்தே கவிஞர்கள் பெறுகின்றனர். “சமுதாயம் என்ற ஓர் அமைப்பில் இருந்து தான் இலக்கியத்திற்கு வேண்டிய மரபுகளும், தேவையான முன் மாதிரிகளும் அமைய இயலும்” என்பர் (Ganagasundaram, 1985).

ஒவ்வொரு சமுதாய மரபிலும் உருவாக்கப்படுகின்ற முடிவான மதிப்பீடுகள் (ultimate values)அல்லது விழுமியங்கள் இலக்கியங்களின் வழியாகத் தான் வெளிப்படுகின்றன. பொதுவாக,

மக்களை உணரச் செய்யக் கூர்மைப்படுத்த, ஆயத்தப்படுத்த, செயலாற்றச் செய்ய இலக்கியம் தொன்று தொட்டுப் பயன்பட்டு வருகின்றது.

மக்களின் விருப்பு வெறுப்புக்களையும் போராட்டங்களையும் உள்ளார்ந்த மனிதாபிமானத்துடன் வெளியிடுவதே சிறந்த இலக்கியமாகக் கருதப்படுகிறது.

“கவிஞர்கள் நாட்டின் மனசாட்சிகள்; சமுதாயம் சஞ்சலப்படும் போது அவர்களின் இதயம் உடைந்து இரத்தம் கசிகிறது. அநீதி இழைக்கப்படும்போது அவர்களின் நெற்றிக்கண் விழித்துக் கொள்கிறது” என்ற சக்திக்கனலின் கூற்றின்படி அப்துல் ரகுமான் சமுதாய நிலைக்கண்டு விழித்தெழுகின்றார் என்று கூறலாம் (Sakthikanal, 2012).

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற வள்ளுவப் பெருந்தகை வாக்கிற்கு இணங்க பிறப்பால் எல்லோரும் சமம் என்ற அடிப்படையில் மனிதனை மனிதனாக மதிப்பதே மனித உரிமையாகக் கொள்ளலாம்.

மனித மதிப்பு (human values) மனித உரிமை (human rights) மனித நேயம் (humanities) மனித வளர்ச்சி (human development) போன்றவை மனிதனை மனிதனாகப் பார்ப்பதற்கான வழிக்காட்டலாகும். இன்றைய சூழலில் உலகெங்கும் மனித உரிமை மீறல் நடைபெறும் போது உரிமை வேட்கை வேகமாக வளர்ந்து எழுகிறது. மனித வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் காரணங்களைச் சுட்டிக்காட்டி உரிமைக்கான உயர்ந்த சிந்தனையை அப்துல் ரகுமான் எடுத்துரைக்கத் தவறியதில்லை.

## சமூக உரிமைகள்

சமுதாயத்தில் உள்ள சில மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றன. உரிமை மறுப்பு மனித உரிமைக்கு எதிரானது. இனம், மொழி, பால், சமயம், தேசியம் என்ற வேறுபாடுகளைக் களைந்து அனைவரின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் காப்பதே மனிதனின் சமூக உரிமையாகும். அடிமைத்தனமும் அடக்குமுறையும் ஏற்றத்தாழ்வில்லா நிலையும், உழைப்புச் சுரண்டலும் இல்லாத சமுதாயத்தைக் கட்டிக்காப்பதே சமுதாயத்தின் கடமையாகும்.

இன்றைய சமுதாயத்தில் வாழும் நாம் பலரின் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினால் பல சமுதாய அவலங்களைக் காணலாம்.

“எங்கள் வீட்டில் திருடிக் கொண்டு

ஒருவன் ஓடினான் திருடன், திருடன்”

என்று கத்தினேன் அமைதிக்கு

பங்கம் விளைவித்ததாக என்னை

கைது செய்து விட்டார்கள்”

சமூகத்தில் உரிமையைப் பெற போராட வேண்டிய நிலை உள்ளது. உரக்கக் கத்துவது கூட இங்கே குற்றமாக கருதக்கூடிய அவல நிலை உரிமை இழந்து, அடக்குமுறைக்கும் ஆளாக வேண்டிய சமூக பிரச்சனைகளை அப்துல் ரகுமான் சுட்டிக் காட்டுகிறார் (Abdul Rahuman, 2018).

‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்கிறது திருமந்திரம். ‘மனித குலத்துக்கு உய்யும் நெறி அன்பு நெறியே’ என்கிறது புத்தமதம். ஆனால், இன்று மதத்தின் பெயரால் கடவுளின் பெயரால் மனித குலமும் அழிக்கப்பட்டு வருவது வேதனையானது. குஜராத் இனப்படுகொலை, பாபர் மசூதி இடிப்பு, போபால் இரயில் எரிப்பு மற்றும் பல்வேறு இடங்களில் வன்முறை தாக்குதல், வெடிகுண்டு கலாச்சாரம், உடை பழக்கம், உணவு முறை போன்றவை இன்றும் தொடருகிறது.

“ஆலய மணி ஓசையும்

மசூதியின் அலைப்பொலியும்

காற்றில் கரைந்து சங்கமிக்கும் அர்த்தம்

இவர்களுக்கு எப்போது விளங்கும்"

இச்சமூகத்தில் மதநல்லிணக்கம் ஏற்படும் நாள் நம் நாட்டின் ஜனநாயகம் முழுமையாக மலர்ந்த நன்னாளாகும் என்று குறிப்பிடலாம். மதமும் சமய பூசல்களும் ஒழிந்து சமத்துவம் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதாக இக்கவிதைச் சுட்டுகிறது (Abdul Rahuman, 2018).

## அரசியல் உரிமை

ஓர் அரசின் செயல்பாட்டினை அளவிடும் ஓர் அளவுகோளாக மனித உரிமைகள் உரைப்படுகின்றன. மக்களைக் காப்பதும் உரிமைகளைப் பேணுவதும் அரசின் கடமையாகும். அரசின் மூன்று அங்கங்களான சட்டமன்றம், நிர்வாக மன்றம், நீதிமன்றம் ஆகியவைகள் மனித உரிமையைப் பாதுகாப்பதில் தங்கள் நடவடிக்கைகளைச் செலுத்துகிறது.

அரசியல் உரிமைகள் மக்கள் தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் தேசிய, மாநில, உள்ளாட்சி அல்லது சமுதாய மட்டத்திலுள்ள ஆட்சியில் பங்கு பெறுவதற்கும் உறுதி செய்கின்றன.

"சுதந்திர தினவிழாவில் 'ஜன கன மன' பாடிக்

கொண்டிருந்தார்கள் நான் பசியால் சுருண்டு

படுத்துக் கொண்டிருந்தேன் எழுந்து நிற்க

முடியவில்லை தேசிய கீதத்தை அவமதித்ததாகச்

சிறையில் அடைத்து விட்டார்கள்"

மனித உயிர் வாழ்வதற்கு அடிப்படைத் தேவையான உணவு இல்லாமல் வாடி வதங்கி இருக்கும் ஏழைகளின் மீது மட்டும் அரசுக்கு எப்போதும் ஏளனம் தான். அடிப்படை உரிமைகளில் உணவு தான் பிரதானம். ஆனால், தன் குடிமகன் பட்டினியால் சாவது அந்நாட்டு அரசின் அவமானம் என்பதை கவிஞர் குறிப்பிடுகிறார் (Abdul Rahuman, 2018).

## தனி மனித உரிமைகள்

தனி மனித உரிமை அல்லது தனி மனிதக்கோட்பாடு என்பது மாற்ற முடியாத மனித இயல்பு ஆகும். நடைமுறையில் மனித கோட்பாடு என்பது தனிமனிதனுக்குச் சமுதாய நலத்தை அடிபணிய வைக்கும் சமுதாய எதிர்ப்புக் கொள்கையாகவும் கொள்ளலாம். தனிமனித உரிமை (individual rights) என்பது தனிநபர் சுதந்திரத்தைக் குறிக்கிறது.

ஒவ்வொரு மனிதனும் உயிர் வாழும் உரிமையினை இயற்கையாகப் பெறுகின்றான். இத்தகைய உரிமைகள் சட்டங்கள் மூலம் பாதுகாக்கப்படும் என்று பன்னாட்டு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் (1996)கூறுகின்றன. சட்டத்திற்குப் புறம்பாக எந்த ஒரு நபருக்கும் உயிர் வாழும் உரிமை மறுக்கப்படக் கூடாது என்று இந்திய அரசியல் சாசனம் விதி 21கூறுகிறது. மேலும், மனிதன் கண்ணியத்துடன் உயிர் வாழ வேண்டும். சிறையில் இருக்கும் ஒரு கைதி கூட கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும். உயிர்ப்பாதுகாக்கப்படுவதின்றி அவ்வுயிர் மற்றும் உடல் கௌரவமாக நடத்தப்பட வேண்டும் என்பதாகும்.

"கைரேகைகளில் / சிக்கல் விழுந்துவிட்ட / இந்தக் காலத்திலும்

குளம் என்கிறாய் / கோத்திரம் என்கிறாய் / உஞ்ச விருத்தி

செய்து தான் / உயிர் வாழ்கிறான் பிராமணன் / ஆட்சி பீடம் தவிர

வேறெங்கும் அமர்வதில்லையா சத்திரியர் /

வைசியன் மட்டும் தான் / தராசு பிடிக்கிறானா

ஏர் ஓட்டுபவன் எல்லாம் / சூத்திரனா"

என்று மனிதனிடம் காணப்படும் சாதி வேற்றுமைகளைச் சுட்டிக்காட்டுவதுடன் அனைத்துச் சாதியினரும் அனைத்து வேலைகளையும் செய்யமுடியும் என்பதை வலியுறுத்துகிறார் (Abdul Rahuman, 2018).

குழந்தை நலனே சமுதாயம் மற்றும் நாட்டின் நலனாகும். இந்தியளவில் குழந்தைகளின் உரிமைகளைக் காக்க குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் 1960 சிறார் தண்டனை நீதிச்சட்டம் (1986) போன்ற சட்டங்கள் உள்ளன. ஐ.நாவின் குழந்தைப் பராமரிப்பு விதிகளும் இந்திய அரசியலமைப்பும் இருந்தும்கூட குழந்தை உரிமைகள் ஒதுக்கப்படுகின்றன. சமூகப் பொருளாதாரச் சூழ்நிலையின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கான குழந்தைகள் அடிப்படை உரிமைகளை இழந்து சிறுவயதில் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். உலகம் முழுவதும் சுமார் 75 கோடி குழந்தைகள் தொழிலாளர்கள் உள்ளனர். 110 கோடி மக்கள் தொகையில் 5 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சுமார் 18.56 பேர் உள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

"வாழ்க்கையே / இவர்களோடு / கண்ணாமூச்சி ஆடும் போது

இவர் எப்படி / கண்ணாமூச்சி ஆடுவார்கள்

கண்ணீர் வெள்ளத்தில் இருந்து / கரையேறத் துடிக்கும்

இவர்களுக்கு / மழைநீரில் / காகிதக் கப்பல் விட

ஓய்வு ஏது?"

தொழிற்சாலைகள், டீ கடைகள், பூங்காக்கள், கடற்கரைகள் போன்ற இடங்களில் வேலைப்பளுவில் உழன்று கொண்டிருக்கும் சிறார்களின் நிலையினைச் சுட்டிக்காட்டுகிறார் (Abdul Rahuman, 2018). மேலும், இவர்களின் வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்க்கவும் எதிர்கால வாழ்க்கையைக் குறித்தும்,

"பூக்களை ஏந்த வேண்டிய / இந்த மெல்லிய காம்புகளில்

வாழ்க்கையின் பாரத்தை / ஏற்றி வந்தது யார்

வருடம் தவறாமல் '/ குழந்தைகள் தினத்தைத்

கொண்டாடுகிறவர்களே!

தினங்களைக் கொண்டாடுவதை விட்டு விட்டுக்

குழந்தைகளை எப்போது / கொண்டாடப்போகிறீர்கள்.

என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார் (Abdul Rahuman, 2018).

முன்னாள் இந்திய பிரதமர் நேருவின் பிறந்த நாளை குழந்தைகள் தினமாக கொண்டாடுகிறோம் என்பது குறிப்பிடத்தக்கது. ஐ. நா. சபை 1979ஆம் ஆண்டைச் சர்வதேச குழந்தைகள் ஆண்டாக அறிவித்தது இங்கு நோக்கத்தக்கது. குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினமாக ஜூன் 12 ஆம் நாளை அனுசரிக்கிறோம்.

## பெண்ணுரிமை

மனித உரிமைகளோடு பெண்களின் உரிமைகள் தொடர்புடையவை. இயற்கை ஆண்களுக்கு இல்லாத உடல் ரீதியான சில வசதி குறைவுகளைப் பெண்களுக்குக் கொடுத்திருக்கலாம். ஆனால், உணர்வு அடிப்படையிலும் பொருளாதார நிலையிலும் வாழ்க்கைச் சமத்துவப் பாதுகாப்பிலும் பெண்கள் பலவீனமான நிலையில் வைக்கப்படுவது கொடுமையானது.

மனித உரிமைப் போராட்டங்களில் பிறிதொரு களமாக 'ஆண் - பெண் சமத்துவம்' என்ற இலட்சியம் கருதப்பட்டது. அத்தகைய இலட்சியத்தை எட்டுவதற்கான பெண்ணுரிமை பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. "பெண்மையும் தியாகமும் ஒன்றையொன்று பிரிக்கமுடியாத நிலையிலும் இருக்கிறது. அத்தியாகத்திற்கு அடிப்படையாகப் பொறுமையும் கொண்ட பெண்ணே மிகவும் பெருமைக்குரியவளாகக் காட்சியளிக்கிறாள்" (Kalyanasundaranar, 1957).

"பெண்கள் இந்நாட்டின் கண்கள்". ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள்". என்று குறிப்பிடும் இச்சமுதாயத்தில் தான் பெண்கள் படும் இன்னல்களோ ஏராளம். குடும்ப அமைப்பிலும் பெண்கள் நிம்மதியாக இல்லை. பல உறவுகளாக பெயர் வைத்து அழைத்தாலும் அதில் துளியும் பெண்மைக்கு மரியாதை இல்லை என்பதாக,

"காதல் கூட / நாம் உனக்கு விரிக்கும் வலைதான்

தாலி கூட / நாம் உனக்கு பூட்டும் விலங்குதான்

அம்மா, சகோதரி, காதலி, மனைவி, மகள்

வைப்பாட்டி, வேசி என்று / எங்கள் விளையாட்டிற்கான

பொம்மையாகவே உன்னை ஆக்கினோம்" (Abdul Rahuman, 1987)

## முடிவுரை

மனிதன் கண்ணியத்தோடும் சுதந்திரத்தோடும் சமத்துவமாக கூடி வாழப் பிறந்தவன். சமுதாயத்தில் அவனுக்கென்று அடிப்படை உரிமைகள் உள்ளன. உரிமை பெறுவதற்கும் பெற்ற உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் பறிக்கப்பட்டதை மீட்கவும் போராடுகிறான். மனித உரிமைகளைக் காப்பது சமுதாயத்தின் அறம் சார்ந்த கடமை என்பதால் சமுதாய அங்கத்தினராக உள்ள அனைவருமே இதற்காக முயன்று வருகின்றனர். இத்தகைய பணியை அப்துல் ரகுமான் கவிதைகளிலும் காணலாம். மக்களின் விருப்பு வெறுப்புகளை உள்ளடக்கி மனிதாபிமானத்துடன் கவிதைகளின் உள்ளடக்கம் அமைந்திருக்கிறது. மனித மாண்பு, மனிதநேயம், மனித குல வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கிற சமூகக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிய கவிக்குரலாக அப்துல் ரகுமான் கவிதைகள் வெளிப்படுகின்றன. இருபத்தோராம் நூற்றாண்டு புதுக்கவிதை யுகத்தில் மனித உரிமைகளுக்காகப் போராடும் ஒரு போராட்டக் கருவியாகவே கவிதைகள் மாறியுள்ளன. மனித உரிமைகள் மீறும் போதும் பாதிக்கும் போதும் கவிதைகள் விழித்துக்கொள்கிறன. மனித உரிமைக்காகப் புரட்சியும் போராட்டமும் சில நேரங்களில் இரத்த வன்முறையாக மாறுவதும் சமுதாய மாற்றத்திற்கான வழியாகத் தோன்றுகிறது என்பதை அப்துல் ரகுமானின் கவிதையின் வாயிலாக அறிய முடிகிறது. இவ்வாய்வானது மனித சமுதாயத்தின் காலங்காலமாய் நிலவி வந்த சமூகக் கட்டுபாடுகளையும் அடக்குமுறைகளையும் தகர்த்தெறிந்த கருவியாக புதுக்கவிதைகள் திகழ்ந்திருக்கின்றன. இவற்றை உலகிற்கு எடுத்துச் சொல்வதோடு மட்டுமல்லாமல் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் அறம் போற்றப்பட வேண்டும் என்னும் தன்மையில் அப்துல் ரகுமான் கவிதைகள் பயன்உள்ளதாக அமைகிறது.

## References

Abdul Rahuman, (1987) Palveedhi, Annam Pathippagam, Chennai, India.

Abdul Rahuman, (2018) Suttuviral, National Pathippagam, Chennai, India.

Ganagasundaram, V. (1985) Jagasirpin Samooga Puthinangal, Vanathi Pathippagam, Chennai, India.

Jagadesan, A. (2008) Ilakkiyathil Manitha Urimaik Kotpadukal, Thamarai Pathippagam, Chennai, India.

Kailasapathi, K. (1988) Samugaviyalum Ilakkiyamum, Kumaran Pathippagam, Chennai, India.

Kalyanasundaranar, (1957) Pennin Perumai, Sadhu Press, Chennai, India.

Sakthikanal, (2012) Nengal Kettavai, Pookudai Pathippagam, Chennai, India.

Vijayakumar, (2022) Manitha Urimaikal Or Arimugam, Magilam Veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License